# தலைவாசல் Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 71 | thalaivaasaltv@gmail.com | வெள்ளிக்கிழமை | டிசம்பர் 11, 2020




## அரசியல் கைதிகள் விவகாரம் ஜனாதிபதியுடன் பேசி முடிவெடுப்பேன்

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

"தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ள வேண்டுகோள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுடன் நேரில் பேசி தீர்க்கமான முடிவொன்றை விரைவில் எடுப்போம்."

- இவ்வாறு உறுதியளித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் காலம் தாழ்த்தாது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு 15 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகக் கையெழுத்திட்டுக் கடிதம் எழுதியுள்ளனர்.

அந்தக் கடிதம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச

03

## மாகாண சபைத் தேர்தல் விரைந்து நடத்த பிரதமர் பணிப்பு

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி, அதற்கான சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர்களுக்கும், பிரதமருக்கும் இடையே இன்று

03

## ஆலய மணியின் கயிற்றில் தொங்கி விளையாடிய சிறுவன் பலி

ஆலயமணியின் கயிற்றில் தொங்கியபடி விளையாடிக்கொண்டிருந்த பாடசாலை மாணவனின் கழுத்தில் அக்கயிறு சிக்குண்டதில் அம்மாணவன் மரணமடைந்துள்ளார்.

எட்டு வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக நோர்வூட் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

குறித்த மாணவன் தனது வீட்டுக்கு அண்மையிலுள்ள ஆலய மணியில் விளையாடிக் கொண்டிருந்தபோது அக் கயிறு கழுத்தில் சிக்குண்டு தொங்கிய நிலையில் இருந்துள்ளார். இதனை அவதானித்த தோட்ட அதிகாரி குறித்த சிறுவனை காப்பாற்றி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்துள்ளார்.

எவ்வாறெனினும் வைத்தியசாலையில் அனுமதிக்கும் போதும் அவர் உயிழந்திருந்ததாக தெரியவந்துள்ளது.

## கதவுகள் உடைத்து அடிதடி வாழைச்சேனை பிரதேச சபை

### பாதீட்டு வாக்கெடுப்பில் களேபரம்

வாழைச்சேனை பிரதேச சபையின் 2021ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்தரப்பினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நிலையில் வரவு செலவுத் திட்டம் இன்று வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

வாழைச்சேனை பிரதேச சபையின் 2021ம்

03

## கிழக்கு மாகாணத்தில் முதலாவது கொரோனா மரணம்



கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகிய முதலாவது கொரோனா தோற்றாளர் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்திய சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 80 வயதுடைய ஆணொருவரே நேற்று (10)இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

03

## எழுமாறாக நடந்த பி.சி.ஆர் பரிசோதனை

## மருதனார்மட பகுதியில் வர்த்தகருக்குக் கொரோனா

**அவர் முச்சக்கரவண்டி ஓட்டுனர் எனவும் தகவல்**

யாழ்ப்பாணம் மருதனார்மடம் பகுதியில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மருனார்மடம் சந்தையில் கடை வைத்திருக்கும் குறித்த நபர் முச்சக்கர

03

## யாழில் கொரோனா கட்டுப்பாடுகள் தளர்வு

யாழ்.மாவட்டத்தில் கொரோனா பரவல் அபாயம் காரணமாக விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட செயலர் க.மகேஸன் கூறியுள்ளார்.

இது குறித்து யாழ். மாவட்ட செயலர் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது மேலும்

03




# மகாகவியின் 138 வது பிறந்த தின நினைவு தினம்



மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் 138வது பிறந்த தின நினைவு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவர் அலுவலகத்தில் ஏற்பாட்டில் நல்லூர் ஆலயத்திற்கு பின்பக்க வீதியிலுள்ள பாரதியார் நினைவுச் சிலை அடியில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது பாரதியார் நினைவுச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பாரதியார் நினைவுத் தூபிக்கு இந்திய துணைத் தூதுவர் மலர்மாலை அணிக்க, தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்கள் பாரதியாருக்கு மலர்மாலை அணிவித்தனர்.

இதன் பின்னர் பாரதியாரின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் யாழ் மாநகரசபை முதல்வர் இமானுவேல் ஆர்னால்ட், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் அனந்தி சசிதரன், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**படங்கள்: ஐ.சிவசாந்தன்**

# நாம் ஒருபோதும் மக்களுக்கு மோசடி செய்யமாட்டோம்

தேர்தலை எதிர்பார்த்து எந்தவொரு விடயமும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. நாம் அந்த மோசடி செயலை மக்களுக்கு செய்ய மாட்டோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான விவாதத்தின்போது, பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விவாதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "இந்த வரவு செலவுத் திட்டத்தை நாம் முன்வைக்கும் போது 70 பில்லியன் ரூபாயை கொரோனா தொற்றுக்கென செலவிட்டிருந்தோம்.

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு இடம்பெறும் இன்றைய நாளவில் நாம் 82 பில்லியன் ரூபாயை கொவிட் ஒழிப்பிற்காக செலவிட்டுள்ளோம். டிசம்பராகும்போது அது 90 பில்லியனை விட அதிகமாகும். அதனால் இது போன்ற பாரிய சவால்களை ஏற்றுக்கொண்டு முன்வைக்கப்படும் வரவு செலவுத் திட்டமாக இதனை குறிப்பிட வேண்டும்.

நாம் உலகத்துடன் எந்தளவிற்கு பிணைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர சரியான தருணம் தான் இது. உலகில் இடம்பெறும் விடயங்கள் அரசியல், பொருளாதாரம், சுகாதார அடிப்படையில் இடம்பெறும் விடயங்கள் எம்மை எந்தளவு பாதிக்கும் என்பதை புரிந்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இதுவாகும்.



உலகில் இடம்பெறும் விடயங்கள் இந்த சபையை கூட கடுமையாக பாதிக்கும் என நான் கூற வேண்டும். இதுபோன்ற உலக நெருக்கடிகளின்போது வெளி உலகத்தை சார்ந்துள்ள நாடுகள் உதவியற்ற நிலைக்கு தள்ளப்படும்.

நாம் நமது பொருளாதாரத்தை தேசிய மட்டத்தில் கட்டியெழுப்பியிருந்தால் இதுபோன்ற நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க கூடியதாயிருந்திருக்கும். அதுதான் கொவிட்-19 எமக்கு கற்பித்த பாடம். நாம் ஏற்கனவே இந்நிலையை புரிந்துக் கொண்டிருந்தோம்.

அதனாலேயே சுபீட்சத்தின் நோக்கு தேசிய பொருளாதாரம் குறித்தும், தேசிய விவசாய வளர்ச்சி தொடர்பிலும் எண்ணினோம். இந்த வரவு செலவுத் திட்டம் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மற்றைய வரவு செலவுத் திட்டங்களில் காணப்பட்ட நோக்கமல்ல இந்த வரவு செலவுத் திட்டத்தில் காணப்படுவது. மற்றைய வரவு செலவுத் திட்டங்களின் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை ஈடுசெய்வதே முதன்மையாகும். எனினும் இந்த வரவு செலவுத் திட்டம் உள்ளூர் விவசாயிகள், உள்ளூர் தொழிலதிபர்கள், உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஆகியோரை மேம்படுத்தி உலகை எதிர்கொள்ளக்கூடிய மற்றும் இதுபோன்ற பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய நாட்டை கட்டியெழுப்புவதற்காகவே முழுமையாக ஒதுக்கப்பட்டுள்ளது.

சுபீட்சத்தின் நோக்கில் விவசாயத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம். நமக்கான உணவை நாமே உற்பத்தி செய்வது நமது நாட்டை கட்டியெழுப்புவதற்கான சிறந்த வழியாகும். இவ்வளவு காலமும் ஒரு கிலோகிராம் நெல்லிற்கு 32 ரூபாயே செலுத்தப்பட்டது. நாம் அதனை 50 ரூபாய் வரை அதிகரித்தோம். உரத்தை இலவசமாக நிவாரணமாக பெற்றுக் கொடுத்தோம். இவ்வாறு செய்ததன் ஊடாக விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பானது.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் பொதுமக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை என எமது விமர்சகர்கள் குற்றஞ்சாட்டினர். எனினும், நாம் ஒருபோதும் வெறுமனே பணத்தை செலவிடும் திட்டங்களை ஆரம்பிக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். எதிர்வரும் தேர்தலை எதிர்பார்த்து எந்தவொரு விடயமும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. நாம் அந்த மோசடி செயலை மக்களுக்கு செய்ய மாட்டோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார்

தலைவாசல் எங்கள் பாரம்பரியம் Thalaivaasal

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

### குழந்தைகளுக்கான குறைநிரப்பு உணவூட்டல்

ஆரம்ப குழந்தைப்பருவத்தில் வழங்கப்படும் முறையான போசாக்கானது ஆரோக்கியமான எதிர்காலத்திற்கான முதலீடாகும். குறைநிரப்பு உணவுகள் தாய்ப்பாலை விட மேலதிகமாக வழங்கப்படும் உணவுகள் ஆகும். முதல் 6 மாத காலம் தனித் தாய்ப்பாலை வழங்கிய பின் படிப்படியாக அறிமுகப்படுத்தி தாய்ப்பாலுக்கு மேலதிகமாக வழங்கப்பட வேண்டும். உங்களுக்கு வழங்கப்பட்ட குழந்தைகளுக்கான வளர்ச்சிப்பதிவேட்டில் ஒவ்வொரு வயதிற்கேற்ற உணவுகளும் அவை வழங்கப்பட வேண்டிய முறைகளும் விபரிக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களை உங்கள் குடும்ப நல உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்தியகலாநிதி**
**கோ.றஜீவ்**

## நேற்று 538 பேருக்கு கொரோனா தொற்று!



நாட்டில் நேற்று மட்டும் 538 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 30 ஆயிரத்து 613ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டவர்களில் 69 பேர் வெளிநாடுகளில் இருந்து நாட்டிற்கு அழைத்துவரப்பட்டவர்கள் என அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று 461 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 22 ஆயிரத்து 261 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் எட்டாயிரத்து 206 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# அனுராதபுரத்தில் 200 பேருக்கு எலி காய்ச்சல்

அனுராதபுரம் மாவட்டத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் இது வரைக்கும் 200 பேருக்கு எலி காய்ச்சல் ஏற்பட்டுள்ளதுடன் அதனால் மூவர் உயிரிழந்துள்ளதாகவும் அனுராதபுரம் மாவட்ட தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் தேஜன சோமதிலக தெரிவித்தார்.

திறப்பனை, விலச்சிய மற்றும் இபலோகம பகுதிகளைச் சேர்ந்த மூவரே இதனால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு 150 பேருக்கு மாத்திரமே எலி காய்ச்சல் ஏற்பட்டிருந்ததுடன் இவ்வருடம் இது வரைக்குமான கால பகுதிக்குள் 200 பேர் எலி காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் விசேட வைத்திய நிபுணர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தலாவ, விலச்சிய, தம்புத்தேகம, மதவாச்சி மற்றும் கெக்கிராவ பிரதேசங்களிலேயே அதிகமானோர்க்கு எலி காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு எலி காய்ச்சலுக்குள்ளான நோயாளர்கள் அதிகரித்து காணப்படு கின்றனர்.

தற்போது விவசாயிகள் வயல் வேலைகளில் ஈடுபட்டுள்ளதுடன் இம்மாதத்தினுள் எலி காய்ச்சல் அதிகரிக்க கூடுமெனவும் அவர் தெரிவித்தார்.

# லங்கா பிரிமியர் லீக் அரையிறுதிக்குள் நுழைந்த 4 அணிகள்

கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமான லங்கா பிரிமியர் லீக் போட்டித் தொடரின் அரையிறுதி போட்டிக்கான அணிகள் தெரிவாகி யுள்ளன.

அதன்படி, தம்புள்ளை விகிங்ஸ், கொழும்பு கிங்ஸ், யாழ்ப்பாணம் ஸ்ரானியன் மற்றும் காலி கெலடியேடர்ஸ் ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

# கொரோனா தாய்க்கு இரட்டைக் குழந்தை

முல்லேரியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா தொற்றுக்குள்ளான 23 வயதுடைய தாய் ஒருவருக்கு ஆரோக்கியமான நிலையில் இரட்டைக் குழந்தை பிறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் இருந்ததன் காரணமாக சிசேரியன் சத்திர சிகிச்சை முறைப்படி பிரசவம் பார்த்த தாக தெரிவிக்கப்படுகின்றது.

# மலையக பல்கலைக்கழகம் விரைவில் உதயமாகும்

மலையக பல்கலைக்கழகம் அமைப்பதற்கான இடம் கொட்டகலையில் ஒதுக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் மலையக புத்திஜீவிகளுடன் கலந்துரையாடி பாடத் திட்டங்கள் தொடர்பில் முடிவெடுக்கப்படும். அதேபோல மலையகத்துக்கான தனி வீட்டுத் திட்டம் ஜனவரி முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும் - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தலவாக்கலை, வட்டகொடையில் அமைந்துள்ள பிரஜாசக்தி நிலையத்தில் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 13 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் ஊடாக மலையக மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கூட்டுப்பண்ணை அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான பயிற்சி நிலையம் அமைப்பதற்கான கட்டிட தொகுதிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

மலையக பல்கலைக்கத்துக்கான இடம் கொட்டகலை ரொசிட்டா பாம் பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாய கல்லூரி ஒன்றும் அமைக்கப்படும். விரைவில் மலையக புத்திஜீவிகளுடன் கலந்துரையாடி, பாடத்திட்டங்கள் பற்றி தீர்மானிக்கப்படும். எனது அப்பா கண்ட முக்கிய கனவொன்றை நிறைவேற்றியுள்ளேன் என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## யாழில் கொரோனா...

அவர் கூறுகையில்,

யாழ்.மாவட்டத்தில் 874 குடும்பங்களை சேர்ந்த 1905 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். மேலும் அக்டோபர் - நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தின் முற்பகுதிவரை

26 கொரோனா தொற்றாளர்கள் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 18 பேர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியிருக்கின்றனர்.

இந்நிலையில் மாவட்ட சுகாதார பிரிவுக்கு கொரோனா தடுப்பு செயலணி வழங்கிய உத்தரவுக்கு அமைவாக ஆலயங்களில் 50 பேர் வரையில் வழிபாடு நடத்த அனுமதிக்கப்படுகிறது.

மேலும் விடுதிகள் மற்றும் கலியாண மண்டபங்களில் பயிற்சி பட்டறைகள், கலந்துரையாடல்கள் நடத்த அனுமதிக்கப்படுகின்றது. அங்கும் 50 பேர் அனுமதிக் கப்படுவதுடன்,

வரவு பதிவேடு மற்றும் சுகாதார நடைமுறைகள் மிக இறுக்கமான முறையில் கடைப்பிடிக்க வேண்டும். ஆனாலும் திருமண மண்டபங்கள், விடுதிகளில்

திருமணங்கள் மற்றும் விழாக்களை நடத்த அனுமதி இல்லை. அவை வீடுகளிலேயே சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடத்தப்படவேண்டும்.

அதேபோல் தனியார் கல்வி நிலையங்களை நடத்தவும் அனுமதி மறுக்கப்படுகின்றது. அலுவலக கடமையின் நிமித்தம் வேறு மாகாணங்களுக்கு செல்லும் அரச ஊழியர்கள்

மற்றும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் நபர்களுக்கு தனிமைப்படுத்தல் இல்லை. ஆனால் அவர்கள் அலுவலக பணி அல்லது அத்தியாவசிய பணிக்காகவே சென்றனர் என்பதை உறுதிப்படுத்தவேண்டும். என மாவட்ட செயலர் கூறியுள்ளார்.

## அரசியல் கைதிகள்...

வுடனான நேற்றைய சந்திப்பின்போது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையளிக்கப் பட்டது.

அதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடாளுமன்றத்தில் எதிரணியிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் குறித்த உறுப்பினர்களால் என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, குறித்த கைதிகளின் விடுதலை தொடர்பிலும் அவர்கள் என்னுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதிக்குரிய கடிதத்தை அவரிடம் நான் சமர்ப்பிக்கவுள்ளேன். அத்துடன் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ள வேண்டுகோள் தொடர்பில் ஜனாதிபதி, நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருடன் நேரில் பேசி தீர்க்கமான முடிவொன்று விரைவில் எடுக்கவுள்ளோம்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்பத்துக்கிணங்க இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியுடன் அவர்கள் சந்திப்பதற்கான ஏற்பாட்டையும் செய்து கொடுக்கவுள்ளேன்" - என்றார்.

## மாகாண சபைத் தேர்தல்...

முற்பகல் விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் முக்கிய சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பழைய அல்லது புதிய முறைக்கு அமைவாகத் தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பம் குறித்து ஆராயுமாறும் பிரதமர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

அதன் காரணமாக இம்முறை மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமைக்கு அமைய நடத்தி, எதிர்காலத்தில் தேவையான சட்டங்கள் உருவாக்கப்பட்டதன் பின்னர் புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது எளிதாக அமையும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். அதற்குப் பதிலளித்த பிரதமர் ஏற்கனவே அது தொடர்பில் சபாநாயகரிடம் தான் கோரிக்கை விடுத்துள்ளார் என்று குறிப்பிட்டார்.

குறித்த சந்தர்ப்பத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா உள்ளிட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## கிழக்கு மாகாணத்தின்...

இதனை இன்று (11) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இவர் கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் நேற்று(10) இரவு ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது மட்டக்களப்பு பகுதியில் உயிரிழந்துள்ளார்.

## மருதனார்மட...

வண்டியும் வைத்திருப்பதாகவும் முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு இன்று எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நாளை, மருதனார்மடம் பகுதியில் மீளவும் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கேதீஸ்வரன் அருவிக்குத் தெரிவித்தார்.

இதேவேளை இன்றைய தொற்றாளர்கள் குறித்து யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை,

இன்று யாழ் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடம் மற்றும் யாழ் மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 363 பேருக்கு கோவிட் -19 பரிசோதனை செய்யப்பட்டது. மருதனார் மடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. அதேவேளை வவுனியா தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்று பரிசோதனை செய்யப்பட்ட வர்களில் ஏனையவர்களுக்கு கோவிட் -19 தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது. - என்றுள்ளது.

## கதவுகள் உடைத்து...

ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இரண்டு சபை உறுப்பினர் எதிர்வரும் 15ம் திகதி வரை விளக்கமறியலில் உள்ள நிலையில் எதிர்தரப்பினர் சபையை நடாத்தக் கூடாது என்று சபை மண்டப நுழைவாயிலை மூடி போராட்டம் நடாத்தினார்கள்.

இதன்போது வாழைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் திருமதி.ப.லிங்கேஸ்வரன் குறித்த இடத்திற்கு வருகை தந்து உறுப்பினர்களிடம் கலந்துரையாடிய சமயத்தில் சம்பவ இடத்தில் திடீரென மயங்கி விழுந்த நிலையில் உடனடியாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதன் பிற்பாடு குறித்த இடத்திற்கு வருகை தந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) எதிர்கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடலை நடாத்தியதுடன், உள்ளே வருவதற்கு நுழைவாயிலை திறக்குமாறு கோரியதற்கு இணங்க திறக்கப்படவில்லை.

அத்தோடு சபையின் தவிசாளர் சபை மண்டபத்திற்குள் உள்ள தனது அறையில் வெளியே வராது வண்ணம் இருந்தார். இதனை தொடர்ந்து சபை உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவாளர்கள் ஆகியோருக்கு இடையில் பல்வேறு காரசாரமான சம்பவங்கள், வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன் காரணமாக பொலிஸ் கலகம் அடக்கும் படையினர் குவிக்கப்பட்டு கூடி நின்றவர்களை கலைத்தனர்.

பின்னர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சபை உறுப்பினர்கள் சபை மண்டபத்தினுள் இருந்து வெளியில் வந்து சபை மண்டப நுழைவாயிலை உடைத்த நிலையில் வெளியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன் மற்றும் கட்சி ஆதரவாளர்களை உள்ளே வரவழைத்ததோடு, தவிசாளரின் அறையினை உடைத்து தவிசாளரையும் வெளியில் சபை உறுப்பினர்கள் கொண்டு வந்தனர்.

அதன்பிற்பாடு எதிர்கட்சி உறுப்பினர்கள் சபையை நடாத்த விடாது தடுத்த போது இரண்டு சபை உறுப்பினர்களை தாக்கிவாறு உள்ளே சென்று ஆளும் தரப்பு உறுப்பினர்கள் பதினொரு பேருடன் 2021ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதில் எதிர்கட்சி உறுப்பினர்கள் எவரும் 2021ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இதில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆறு உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய கட்சி ஒரு உறுப்பினர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு உறுப்பினர், சுயேட்சைக்குழு (கருணா கட்சி) ஒரு உறுப்பினருமாக பதினொரு பேர் ஆதரவு வழங்கினார்கள்.

அத்தோடு வாழைச்சேனை பிரதேச சபையின் பிரதி தவிசாளர் த.யசோதரன், சபை உறுப்பினர் எம்.வாஸ்தீன் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதுடன், ஊடகங்களுக்கு அனுமதி வழங்காத வகையில் இன்று வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.



# ஜெமினிட்ஸ் விண்கல் பொழிவை இலங்கையர்கள் காணும் வாய்ப்பு!

ஜெமினிட்ஸ் விண்கல் பொழிவை எதிர்வரும் 13ஆம் திகதி இலங்கையர்கள் காணமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக இயற்பியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவின் தலைவர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "எதிர்வரும் 13-14ஆம் திகதிகளில் வருடாந்திர விண்கல் பொழிவு நிகழ்கிறது. அதிகாலை வரை நிலவு ஒளி இல்லாததால் இந்த ஆண்டு அதிக விண்கற்களைக் காணலாம்.

நகர ஒளி மாசுபாடு இல்லாமல் வானம் தெளிவாகவும், இருட்டாகவும் இருந்தால், ஒரு மணி நேரத்திற்கு 120 விண்கற்கள் அல்லது நிமிடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு விண்கற்கள் காணப்படலாம்.

இரவு 9 மணிக்குப் பிறகு கிழக்கு நோக்கி நோக்கிய விண்கற்களை இலங்கையர்கள் காணலாம். ஞாயிற்றுக்கிழமை (13), நள்ளிரவில் மற்றும் திங்கள் (14) சூரிய உதயத்திற்கு முன் விண்கல் பொழிவை காண முடியும்.

திங்களன்று (14) அதிகாலை 2 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரை சூரிய உதயத்திற்கு முந்தைய இருண்ட நேரங்களில் இதைப் பார்ப்பதற்கான சிறந்த நேரம் இருக்கும்.

ஏனெனில் மழையின் கதிரியக்க புள்ளி வானத்தில் மிக அதிகமாக உள்ளது மற்றும் உச்ச செயல்பாடு ஏற்படுகிறது.

இந்த விண்கல் மழை வெள்ளை, மஞ்சள், பச்சை, நீலம் மற்றும் சிவப்பு போன்ற பல வண்ணங்களில் காணப்படும் விளக்குகளின் தடத்துடன் பல வண்ண காட்சிக்கு பிரபலமானது.

இந்த நட்சத்திரங்கள் ஜெமினி என்ற நட்சத்திர விண்மீன் திசையிலிருந்து வருவதாகத் தெரிகிறது, எனவே இதற்கு ஜெமினிட் என்று பெயரிடப்பட்டுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ராஜஸ்தான் மருத்துவமனையில் 9 குழந்தைகள் உயிரிழப்பு



ராஜஸ்தானில் உள்ள அரசு மருத்துவமனையில் புதிதாக பிறந்த 9 சிசுக்கள் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதுகுறித்து அந்த மாநில அரசு அதிகாரிகள் கூறுகையில், கோட்டா நகரில் உள்ள அரசு மருத்துவமனையில் புதிதாக பிறந்த 9 சிசுக்கள் உயிரிழந்தன. அந்த சிசுக்கள் பிறந்து 1 முதல் 4 நாட்களே ஆகின்றன எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சிசுக்களின் திடீர் மரணம் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் அந்தக் குழந்தைகள் எந்தவித பாதிப்புக்கும் ஆளாகி உயிரிழக்கவில்லை என்றும் இது இயற்கை மரணம்தான் எனவும் மருத்துவமனை கண்காணிப்பாளர் சுரேஷ் துலாரா தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக மாநில அரசு வெளியிட்ட அறிக்கையில் "கோட்டா மருத்துவமனை முதல்வர் மாநில சுகாதாரத் துறை அமைச்சருக்கு அனுப்பிய அறிக்கையில் 3 குழந்தைகள் மருத்துவமனைக்கு வரும்போதே உயிரிழந்துவிட்டதாகவும் சில குழந்தைகள் பிறவி குறைபாடுகள் காரணமாகவும் சில சிசுக்கள் திடீரென உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து முதல்கட்ட விசாரணை நடத்துமாறு மாநில சுகாதாரத் துறை அமைச்சர் ரகு சர்மா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் இதே மருத்துவமனையில் 100-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மஹர சிறை களேபரத்தின் பின்னணி என்ன?

மஹர சிறைச்சாலையில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதிலிருந்து தப்பிக்க கைதிகள் ஆரம்பித்த போராட்டத்தை, பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்கள் சிலரே வன்முறையாக மாற்றியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மஹர சிறைச்சாலை விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்திய ஐந்து பேர் கொண்ட குழுவே இதனைத் தெரிவித்துள்ளது.

குறித்த குழுவின் அறிக்கையை நீதிய மைச்சர் நாடாளுமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "சில கும்பல் தலைவர்கள் ஒருவருக்கொருவர் பழிவாங்க முயன்றதால், கைதிகள் நடத்திய ஆர்ப்பாட்டம் வன்முறைக்கு திரும்பியுள்ளது.

மேலும், கைதிகள் யாரும் துப்பாக்கிகள் ஏதும் வைத்திருக்கவில்லை. அதிகாரிகள் மற்றும் நிலைமையைத் தணிக்க வந்தவர்கள் மாத்திரமே துப்பாக்கிகளை வைத்திருந்தனர்.

இருப்பினும், வாயிலுக்கு அருகில் மரக் கட்டைகள், இரும்பு கம்பிகள் மற்றும் கற்கள் இருப்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இதேவேளை சில கைதிகள், பல வகையான மாத்திரைகளைத் திருடி அவற்றை உட்கொண்டுள்ளமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், சிறை வளாகத்தில் இருந்த முக்கியமான ஆவணங்களை கைதிகள் எரித்துள்ளனர்.

அத்துடன் விளக்கமறியலில் கைதிகள் வைக்கப்பட்டுள்ள பகுதி தவிர, வளாகத்தில் உள்ள அனைத்து கட்டடங்களும் சாம்பலாக எரிக்கப்பட்டுள்ளன.

# தமிழ் மக்கள் மிதிக்கப்படாமல் மதிக்கப்படும் சூழலை உருவாக்குவோம்



பேரினவாத தீக்கு எண்ணெய் வார்க்கின்ற செயற்பாடுகளை போலித் தமிழ் தேசிய வாதிகள் குத்தகைக்கு எடுத்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சில தரப்புக்களிடம் சலூன் கதவுகள் போன்று இருக்கும் பேரினவாதத்தினை திறக்கச் செய்வதால் எமது மக்களே பாதிக்கப் படுகின்றனர் எனவும் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தின் இறுதி நாள் அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "மக்கள் வாழ் வாதாரம் - சுகாதாரம் - பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்புகளுக்கு முகங் கொடுத்து வருகின்ற நிலையில், மக்களது பிரச்சினைகளை வேறு திசை நோக்கி திருப்பிவிடுகின்ற செயல்களில் போலி தமிழ்த் தேசியம் பேசுகின்றவர்களும், அதிதீவிர போலி தமிழ்த் தேசியம் பேசுகின்றவர்களும் ஈடுபட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், 'எமது மக்கள் முகங் கொடுத்துள்ள உண்மையான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வராமல், அந்தப் பிரச்சினைகளை மேலும் வளரவிடுவதும், அதனோடு மேலும் பல பிரச்சினைகளை கோர்த்து விடுவதும் இவர்களது வரலாற்று செயற்பாடுகளாகவே தொடர்கின்றன.

புரெவி புயல் வந்துவிட்டுப் போய் விட்டது. ஆனால் இந்த போலித் தமிழ்த் தேசியவாதிகளின் பிறவிக் குணங்களில் எவ்வித மாற்றமும் இல்லை. ஆயிரம் புரெவிகள் வந்தாலும் இவர்களது பிறவிக் குணங்கள் மாறுமா? என்பது சந்தேகமாகவே இருக்கின்றது.

இறுதி யுத்தத்தின்போது யார் யார் எங்கிருந்தார்கள் என்பது பற்றி இப்போது அறிக்கை பட்டிமன்றம் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த அழிவு ஏற்படக் கூடாது என்ற எனது மனிதாபிமான நோக்கு காரணமாக அதனை நிறுத்துவதற்கு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் பேசுவோம் வாருங்கள் என அப்போது நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தியவர்களை அழைத்தபோது, அவர்கள் அதற்கு இணங்கியிருக்கவில்லை. புலிகள் அழிய வேண்டும் என்ற மனநிலையிலே இருந்தார்கள்.

அதை வெளிப்படையாகக் காட்டாமல், புலிகள் நின்றுபிடிப்பார்கள் - விட்டடிப்பார்கள் - 40 ஆயிரம் சவப்பெட்டிகளைத் தயார் செய்யுங்கள் என்றெல்லாம் கதைவிட்டுக் கொண்டு, அழிவுக்கு துணை போனார்கள்.

இந்த நாட்டில் பேரினவாதத்திற்கும் குறிப்பிட்ட தமிழ் அரசியல்வாதிகளின் இனவாதத்திற்கும் இடையில் ஒப்பந்தங்கள் இருக்கக் கூடாது என்பதையே நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

எனவே பதின்மூன்று பேர் சேர்ந்து, எமது மக்களை தொடர்ந்தும் மிதித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையை ஏற்படுத்தாமல் - எமது மக்களை மதித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையை இந்த நாட்டில் ஏற்படுத்தவதற்கு முன்வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்' என்று தன்னுடைய ஆதங்கத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களுக்கு அன்றாட - அபிவிருத்தி மற்றும் அரசியல் ரீதியிலான பிரச்சினைகள் உள்ளது என்பதை வலியுறுத்தியதுடன், அதேபோன்று முஸ்லிம் மக்களுக்கும் கத்தோலிக்க மக்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்ற நிலையில் அவற்றை தீர்ப்பதற்கு அரசாங்கத்தின் ஊடாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

எனவே அரசாங்கத்துடன் இணைந்து எமது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பகிரங்க அழைப்பினை விடுப்பதாவும் இறுதி யுத்த காலத்தில் அதனை புறக்கணித்தது போன்று, எமது மக்களின் நலன்கருதிய இந்த அழைப்பையும் சுய இலாபங்களுக்காக கோட்டை விட்டு விடாது, கைகோர்த்து வரும்படி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.